<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>CC. No. 12 / 2025</u>

PW : 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. கலா | த / பெ. | | திரு. வைத்தியநாதன் |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மே மாதத்தின் 26 ம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ்,M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

<u>26.05.2025</u>

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வலங்கைமான் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிசெய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டுறவு சிக்கன நாணய கடன் சங்கத்தில் செயலாளராக பணிசெய்தார். நான் மேற்குறிப்பிட்ட சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். எனது உறுப்பினர் எண் 448 ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக 81 விசாரணை அதிகாரியும், போலிசாரும் என்னை விசாரித்தார்கள். சங்கத்தின் பிரிவு 81 விசாரணை அதிகாரியும் என்னை விசாரித்தார்கள்.

மேற்குறிப்பிட்ட சங்கத்தில் நான் கடன் வாங்கியிருக்கிறேன். முதன்முதலில் நான் கடன் பெற்ற விவரம் தற்சமயம் நினைவில்லை. இதே சங்கத்தில் 3 லட்சம் கடன் பெற்றுள்ளேன், தேதி மாதம் அந்த கடனுக்கான எண் எதுவும் தற்போது நினைவில்லை. இந்த 3 லட்சம் கடனில் பாதி 2 லட்சத்து 29 ஆயிரத்து 108 ரூபாய் அடைத்துவிட்டேன். 2012 அல்லது 2013 ல் வாங்கினேன். அதன்பிறகு இதே கடனில் 5 லட்சம் ரூபாய் வழங்கமுடியுமா என சங்கத்தில் மனுசெய்து கேட்டேன். 2013 டிசம்பரில் இது நடந்தது. 06.02.2014 ஆம் தேதி சங்கத்திலிருந்து நான் 3 லட்சத்திற்கு செலுத்திய பணம் போக மீதத்தொகை 2 லட்சத்து 16 ஆயிரத்து 965 ரூபாய் காசோலையாக எனக்கு கடன் தந்தார்கள். ஆஜர் எதிரிதான் எனக்கு பணத்தை கொடுத்தார் நான் பெற்றுக்கொண்டேன் அப்போது அந்த பணம் சொசைட்டிபணம் என்றுதான் வாங்கிக்கொண்டேன். இந்த சங்கத்தில் நடைபெற்ற விசாரணையின்போது என் மனுவின்மீது ரூ.5 லட்சம் மே மாதம் 2014 ல் Sanction ஆனது என்பது தெரியவந்தது. அப்போதுதான் ஆஜர் எதிரி சங்கத்திலிருந்து பிப்ரவரி மாதமே பணத்தை எடுத்து என்னிடம் கொடுத்துவிட்டு மே மாதம் எனக்கு அனுமதிக்கப்பட்ட 5 லட்சம் பணத்தை எடுத்து சங்கத்திலேயே வரவு வைத்துள்ளார் இது விசாரணையின்போது எனக்கு தெரியவந்தது. நான் இந்த பணத்தை வாங்கவில்லை என்றும் கையொப்பம் போடவில்லை என்றும் சொன்னேன்.

என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் மேற்படி சங்கத்தின் கடன் எண் 1618 ன் கீழ்தான் எனக்கு ரூ 3 லட்சம் பணம் கடன் கொடுக்கப்பட்டது. கடன் எண் 1756 நான் மனுகொடுத்ததுதான் அதில் எங்குமே நான் கையொப்பம் பெறவில்லை, கடன் பெறவில்லை. ஆனால் ரூ3 லட்சத்திற்கு நான் கடன்பெற்றுக்கொண்டு எனது அலுவலகம் மூலமாக ரூ11 ஆயிரத்து சொச்சம் மாதாமாதம் கட்டினேன். நான் 3 லட்சத்தில் டாப்அப்செய்துதான் மேலும் 5 லட்சம் கடன் கொடுக்கப்பட்டது என்று நினைத்திருந்தேன். விசாரணையில் 3 லட்சத்திலும் பாக்கியுள்ளது தெரியவந்தது இது குறித்து நான் கேட்டேன் அதற்கு சரியான பதிலை ஆஜர் எதிரி கொடுக்கவில்லை. ஆஜர் எதிரியிடம் அலுவலகம் மூலமாக தொகையை செலுத்தியது போக மீத தொகையையும் நேரடியாக செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டேன். அந்த ரசீது என்னிடம் உள்ளது. அந்த ரசீதை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யமுடியும். என்னிடம் கொடுக்கப்பட்ட ரசீதுகளின் தேதிக்கும் விசாரணை அதிகாரி காண்பித்து விசாரித்த ரசீதுகளின் தேதிக்கும் வித்தியாசம் இருந்தது. என்னிடம் உள்ள ரசீதுகளை இந்நீதிமன்றத்தில் தற்சமயம் நான் தாக்கல் செய்கிறேன். அந்த ரசீதுகளின் நகல் (இளஞ்சிகப்பு நிறத்தில் உள்ள ரசீதுகள்) அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது அது **அசாஆ 58 முதல் அசாஆ 65 வரை யாகும்.** (எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

என்னிடம் கொடுக்கப்பட்ட ரசீதுகளில் சிலவற்றில் எனது கையொப்பத்தை ஆஜர் எதிரி பெறவில்லை. சிலவற்றில் ஆஜர் எதிரியே எனது கையொப்பத்தை போட்டுள்ளார். விசாரணையின்போது ஆஜர் எதிரி கவிதா என்னிடம் பெற்ற ரூ.1,54,400/- ஐ திரும்ப சங்கத்தில் செலுத்திவிடுவதாக என்னிடம் சொன்னார். நான் ஆஜர் எதிரியை முழுமையாக நம்பி ஏமாந்துபோனேன். இந்த நடவடிக்கைக்கு பிறகு ஆஜர் எதிரி கட்டவேண்டி தொகை போக மீதி தொகையை நான் கட்டியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் கடன்பட்டுவாடா பேரேட்டில் (01.04.2014 முதல் 31.03.2017 வரை ) பக்கம் 22 ல் என்னுடைய கையொப்பம் எதுவும் இருக்கிறதா என்றால் நான் கையொப்பம் எதுவும் போடவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் மேற்குறிப்பிட்ட பேரேட்டிலும் எனது பெயருக்கு நேராக கையொப்பம் என்ற இடம் வெற்றிடமாகவே உள்ளது. 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் விசாரணை அதிகாரியிடம் நான் கொடுத்ததுதான் அதில் நான் கையொப்பமும் செய்துள்ளேன். அந்த **81 விசாரணை வாக்குமூலம் அசாஆ 66** ஆகும்.

குறுக்குவிசாரணை

என்னை வணிக குற்றப்பிரிவு போலிசார் அவரது அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள் விசாரித்த தேதி ஞாபகம் இல்லை.

போலிஸ்விசாரணையிலும் 81 விசாரணை அதிகாரி விசாரணையிலும் எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசாஆ 66 ல் விசாரணை நாள் என்ற இடத்தில் 06.01.2019 என்று எழுதப்பட்டு அது அடித்து திருத்தப்பட்டு 06.11 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 81 விசாரணை வாக்குமூல 2 வது பக்கத்தில் 5 வது வரியில் 06.02.2016 ல் கடன் எண் 1726 ன்படி ரூ.5 லட்சம் கடன் பட்டுவாடா செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 06.02.2016 ஆம் தேதி கடன் எதுவும் சொசைட்டியிலிருந்து பெறவில்லை என்றால் சரிதான். 23.05.2014 ல் என் பெயரில் ரூ 5 லட்சம் கடன், கடன்பட்டுவாடா பதிவேட்டில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என எழுதபட்டுள்ளது என்றால் சரிதான். 10.12.2018 ல் வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் சங்கத்தின் தலைவருக்கு கடிதம் ஒன்று எழுதியதாக இணைத்து வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் கைவசம் வைத்திருந்து இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்த ரோஸ்கலர் ரசீதுகளில் 7934 என்ற எண்ணிட்ட ரசீதில் (அசாஆ 61) தேதி என்ற இடத்தில் அடித்து திருத்தி பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ரசீதில் உள்ள அனைத்து எழுத்துக்களும் கார்பன் வைத்து படி நகல் எடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆஜர் எதிரி என்னுடைய

கையெழுத்தை போட்டுவிட்டார் என நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் எதிரி எந்த எந்த ஆவணங்களில் எந்த தேதியில் கையெழுத்து போட்டார் எங்கு வைத்து கையெழுத்து போட்டார் என்ற விவரத்தை நான் 81 விசாரணை அதிகாரியின் விசாரணையிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி என்னுடைய கையொப்பத்தை போட்டாரா என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சொசைட்டிக்கு சென்று எனது கடன்பற்றிய விவரங்களை கேட்டேன் எதிரி கொடுக்கவில்லை என்ற விவரத்தை 81 விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2014 மே மாதத்தில் கிடைத்த கடன்தொகையை வாங்கவில்லை என்று 81 விசாரணை அதிகாரியிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சங்கத்தின் தலைவராக இருந்த ஜெயந்தி என்பவரும் நானும் நாங்கள் சேர்ந்துள்ள ஆசிரியர் கூட்டணியில் ஒரே அணியில் இருந்தோம் என்றால் சரியல்ல, வேறுவேறு அணியில் இருந்தோம். ஆனால் இருவரும் நண்பர்கள் என்றால் சரிதான். நான் ஆசிரியர் கூட்டணி நடவடிக்கைகளில் துடிப்பானவர் சுறுசுறுப்பானவர் செல்வாக்கு பெற்றவர் என்றால் சரியல்ல. கடன்பெறவேண்டும் என்றால் என்னுடைய கடன்

விண்ணபத்தை வலங்கைமான் ஆசிரியர் கூட்டுறவு சங்க அலுவலகத்தில் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அந்த விண்ணப்பம் நிர்வாக குழுவில் வைத்து அதற்கு அங்கீகாரம் வழங்கப்படும் என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்குறிப்பிட்ட விண்ணபத்தை மத்திய கூட்டுறவு வங்கியிலும் தரலாம் என்றால் எனக்கு தெரியாது. நான் என்னுடைய கடன் விண்ணபத்தை ஆஜர் எதிரியிடம்தான் கொடுத்தேன். அவசர தேவைகளை அறிந்து நிர்வாக குழுவில் காலதாமதத்தை தவிர்க்க வேண்டி உடனடி ஒப்புதல் பெற்று கடன்பணம் வழங்கப்படும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த கடன் விண்ணபத்தின்மீது கூட்டுறவு மத்திய வங்கியில் அனுமதிபெற்று பின்னர் ஒப்புதல் வந்தால் முதலில் கொடுத்த கடனை உழவடை செய்து முடித்துவிட்டு பிறகு புதிய கடனாக ஆக்கிவிடுவார்கள் என்றால் சரிதான். மே 2014 ல் எனக்கு கடன் தொகை வழங்கப்பட்ட கடன் எண் என்ன என்றால் 1726 ஆகும். 3 லட்சம் கடன் வாங்கிய போது அந்த கடன் எண் நினைவில் உள்ளதா என்றால் நினைவில் இல்லை. நான் கொடுத்த விண்ணபத்தின்பேரில் எனக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு 5 லட்சம் கடன் எனக்கு உடனடியாக வழங்கப்பட்ட கடனுக்கான கடன் எண் நினைவில் இல்லை. நான் மே மாதம் 2014 ல் வாங்கிய கடன் தொகை எண் 1756 என்றும் தற்போது வழக்கிற்காக மாற்றி 1726 என்று

பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடன்பெற்றபிறகு எனது கடன்தொகையை மாதாமாதம் முறையாக உரிய தேதிக்குள் கடன்தொகையை திரும்ப சரியாக செலுத்தவில்லை என்றால் அலுவலகத்தில் தொடர்ந்த வழக்கமாக பிடித்துவருவார்கள் ஒருசில சமயம் நான் நேரடியாக ஆஜர் எதிரியிடமும் கடன் தொகையை கொடுத்துவந்தேன். நாங்கள் சங்கத்திலிருந்து கடன் பெறும்போது என்னுடைய உறுப்பினர் கட்டணம் பங்குதொகை பிடித்தம் செய்யப்படும் என்றால் சரிதான். கடன் தொகைக்கு எத்தனை சதவீதம் பங்குதொகை பிடித்தம் செய்யப்படும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் பெற்ற ரூ5 லட்சம் கடன்தொகைக்கு ரூ50 ஆயிரம் பங்குதொகை பிடித்தம் செய்திருக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே நான் 3 லட்சம் வாங்கியபோது இருந்த பங்குதொகையான ரூ30 ஆயிரத்தையே தொடர்ந்து 5 லட்சம் வாங்கியபோதும் அப்படியே தவறுதலாக 20 ஆயிரம் குறைத்து வரவு வைத்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு நான் 20 ஆயிரம் கட்டியுள்ளேன். அதை எப்போது கட்டினேன் என்பதை 81 விசாரணை அதிகாரியிடம் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ரூ20 ஆயிரம் தொகை செலுத்தவில்லை என்றும் அதனால் தான் நான் தேதியை குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சங்கத்தில் வாங்கிய கடன்தொகையை

முறையாக திரும்ப செலுத்தவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக எதிரிமீது குற்ற ஈர்ப்பு வரும் வகையில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மே 2014 ல் எனக்கு கடன்தொகை கிடைத்தவிவரம் தெரியாது என்று பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அளித்த கடன் விண்ணப்பத்தின்பேரில் பிப்ரவரி 2014 ல் அவசர அவசியம் கருதி ஒப்புதல் பெற்று கடன்தொகையை பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். எனக்காக உடனடி ஒப்புதல் கொடுத்த விவரங்களையும் எனது கடன் மனுவின்பேரில் தாமதமாக கடன் அனுமதி கிடைத்த விவரத்தையும் மறைத்து கடன்தொகை தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

V SUNDARARAJ
Digitally signed by V SUNDARARAJ
Date: 2025.05.26 15:59:39 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.